கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2017/2018 (நவம்பர்/டிசெம்பர் 2019)

# ODT 3213 Theatre Societies and Development Programmes

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி – I இல் இருந்து எவையேனும் இரு வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

---

## பகுதி – I

01. (அ) அபிவிருத்தி என்ற எண்ணக்கரு குறித்து நீர் விளங்கிக்கொள்வது யாது? சுருக்கமாக கூறுக. (05 புள்ளிகள்)

(ஆ) நிதி அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் அபிவிருத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்களை ஆராய்க. (09 புள்ளிகள்)

02. (அ) "பாரம்பரிய வாழ்க்கை முறைகள்" பற்றிய உமது மனப்பதிவுகளை சுருக்கமாக முன்வைக்குக. (07 புள்ளிகள்)

(ஆ) பாரம்பரியமான வாழ்க்கை முறைகளுடன் பாரம்பரிய நிகழ்த்துகலைகள் தொடர்புபடுமாற்றை எடுத்துக்காட்டுக. (07 புள்ளிகள்)

03. நிலைபேறான சமூக அபிவிருத்திக்காக பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமாற்றினை உரிய ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டுக.

(அ) கலைத் திருவிழாக்கள் (Art Festival) (07 புள்ளிகள்)

(ஆ) களப்பயிற்சி அரங்குகள் (Workshop theatre) (07 புள்ளிகள்)

## பகுதி – II

04. உள்ளூர் சமூகங்களின் அசைவியக்கத்தில் உள்ளூர் சடங்குகள் (பத்ததிச் சடங்குகள்) வகிக்கும் முக்கியத்துவத்தினை ஆராய்க. (24 புள்ளிகள்)

05. மீளுருவாக்கம் எனும் ஆய்வுச் செயற்பாடு சமூக அபிவிருத்திக்கான நிகழ்ச்சித் திட்டமாக மேற்கொள்ளப்படுவதால் ஏற்படும் சாதகங்கள் குறித்து உரையாடுக. (24 புள்ளிகள்)

06. ஆற்றுகைகள் ஆய்வுகளாகவும் அபிவிருத்திச் செயற்பாடுகளாகவும் முன்னெடுக்கப்பட்டுவரும் விதத்தினை உதாரணங்கள் காட்டி விளக்குக. (24 புள்ளிகள்)

07. "ஒரு சமூகத்தின் பல்வேறு மனிதர்களும் பங்குபற்றுவதற்கான பொறிமுறைகள் நிரம்பியதே பாரம்பரிய கூத்தரங்கின் அழகியலாகும்" இக்கூற்றினை மையப்படுத்தி பாரம்பரிய கூத்தரங்குகள் இயக்கம் பெறும் விதத்தினை பகுப்பாய்வு செய்க. (24 புள்ளிகள்)

*****